**முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

<u>DW-2- OS. No.397/2018</u>

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27–ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி முதன்மை சார்பு நீதிபதி Dr.V.ஸ்ரீவித்யா, முன்னிலையில் திருமதி.ஜெயலட்சுமி கிரேடு 2 பென்ச் கிளர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திரு.ஈஸ்வரன் | தொழில் : |
| த/பெ. : திரு. | வயது : |
| முகவரி : | மொபைல் எண்: |

**பிரதிவாதி தரப்பில் சாட்சி–2 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சி. எனது தரப்பு சாட்சிக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். எனது தரப்பு சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு பிராது படி தீர்ப்பு அளிக்க வேண்டுமாய் கேட்டு கொள்கிறேன்.

**பிரதிவாதி தரப்பில் சாட்சி–2 மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை .**

1. இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அழைப்பானை ஏதும் வரவில்லை என்றால் ஆமாம். நான் பத்தாம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். பாலமுருகன் என் உறவினர் என்று சொன்னால் சரிதான். பாலமுருகன் கேட்டுக் கொண்டதற்காக சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கும் வழக்கு சொத்தானது நெருப்பெரிச்சல் கிராமம் கா.சா.எண். 487/1 மற்றும் 487/3 காலைகளுக்கு கட்டுப்பட்டது என்று சொன்னால் சரிதான். அது மூன்று ஏக்கர் 37 1/2 சென்ட் பூமியை கொண்டது என்றும் சொன்னால் சரிதான்.

2. தாவா சொத்தானது ஆரம்பத்தில் சின்னசாமி மற்றும் சுப்பிராய கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பூமி என்று சொன்னால் சரிதான். அந்த சின்னசாமியும் சுப்பிராய கவுண்டரும் தான் இந்த வழக்கு சொத்த பூமியை பிரித்த எல்ஜிஆர் நகர் என்ற அமைப்பை விற்பனை செய்து வந்தார்கள் என்றும் சொன்னால் சரிதான். சைட் எண்.48 7 சென்ட் விஸ்தீரணம் என்றும் சொன்னால் சரிதான். சைட் நம்பர் 48 இரண்டாக கீழப்புரம் மற்றும் மேல்புறமாக பிரித்தால் 3 1/2 மற்றும் 3 1/2 சென்டு பூமி வரும் என்று சொன்னால் சரிதான்.

3. இந்த சைட் எண். 48 கிழப்புரம் மேல்புறமாக இரண்டாகப் பிரித்து 1994 ஆம் அண்டு அமுதவள்ளியும், பெரியசாமியும் வாங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அவர்கள் கிரயம் வாங்கிய பின்பு அமுதவள்ளியும் பெரியசாமியும் தான் சுவாதீனத்திலிருந்து வருகிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

4. பெரியசாமி இறந்து போன பின்பு பெரியசாமியின் வாரிசுதாரர்களிடம் இருந்து சண்முகம் கிரயம் வாங்கிக் கொண்டார் என்றும் அதன் பின்பு அமுதவள்ளியும், சண்முகமும் தான் அந்த சைட் நம்பர் 48 இரண்டாகப் பிரித்து கிழப்புறமும் மேல்புறமாக சுவாதீனம் இருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

5.அமுதவல்லிக்கும் பெரியசாமிக்கும் கிரையம் செய்ததற்கு பின்னிட்டு சுப்பராய கவுண்டரும் சின்னசாமி அவர்களும் மற்ற பிரதிவாதிகளுக்கும் அதாவது 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணங்கள் செல்லாது என்றால் சரியல்ல. 1 முதல் 8 பிரதிவாதிகள் சைட் நம்பர் 48 சுவாதீனத்தில் என்றுமே இருந்ததில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தற்போது சைட் நம்பர் 48 கன்ஸ்ட்ரக்ஷன் நடந்த பாதியோடு நிற்கிறது காலியிடம் இல்லை. தற்போது சைட் நம்பர் 48 காலியிடமாகத் தான் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல.

6. 2018 ஆம் ஆண்டில் அமுதவல்லி மேற்படி இடத்தை சுத்தம் செய்து வீடு கட்டலாம் என்று சென்ற போது தான் இந்த விவரமே தெரியவந்தது என்றும் சொன்னால் சரியல்ல. சைட் நம்பர் 48–ல் கன்ஸ்ட்ரக்ஷன் வேலைகள் பாதியோடு நிற்கிறது என்று பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதற்கான பொருட்கள் வாங்கி போடப்பட்ட நிலையில் இருக்கிறது.

7. அசல் வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு பாலமுருகன் மாவட்ட பதிவாளர் இடமும் நீதித்துறை நடுவர் எண்.3 திருப்பூர் இடமும் ஒரு புகார் மனு கொடுத்திருக்கும் விவரம் எனக்கு தெரியுமா என்று கேட்டால் தெரியும். பில்டிங் கட்டும்போது இடைஞ்சல் செய்யப்பட்டது என்றுதான் புகார் கொடுத்து இருக்கிறார்கள். புகார்கள் ஆனது வேறு பரிகாரம் கோரிதான் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் எனக்கு தெரியாது. பாலமுருகன் தாக்கல் செய்திருக்கும் அசல் வழக்கு 331/2018 என்ற வழக்கிலும் நான் சாட்சியம் அளித்து இருக்கிறேன் என்று சொன்னால் ஆமாம். பாலமுருகன் என் உறவினர் என்பதால் தான் நான் பொய்யான சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya,
Digitally signed by Dr.V.Sree Vidya,
Date: 2026.04.27 17:51:19 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.